# 52

# பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது

## (17:1–6, 9, 15, 18)

*ஒரு நாள் மாலையில் நீங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில் பின்வரும் அறிவிப்பு அதில் வெளியாகிறது என்று வைத்துக்கொள்வோம்: "6ம் சேனலின் செய்தியைத் தருவதற்காக நாங்கள் இந்த நிகழ்ச்சியை இடைமறிக்கின்றோம். ஒரு சூறாவளிக்காற்று, செடார் ரிட்ஜ் நகரத்தை நாசமாக்கியுள்ளது. விரிவான செய்திகள் 10:00 மணிக்கு." பிற்பாடு மாலையில், வர்த்தக விளம்பர இடைவேளையின்போது ஒரு மேம்படுத்து மையம் தோன்றி, பேரழிவின் சில காட்சிகளைக் காண்பித்து, ஒரு சில விவரங்களைக் கொடுத்து, "முழு நிகழ்ச்சியும் 10:00 மணிக்கு ஒளிபரப்பப்படும்'' என்று உறுதியளிக்கிறது. 10:00 மணிக்கு, மாலைச் செய்தியானது சூறாவளியைப் பற்றிய முழுமையான அறிக்கையுடன் தொடங்குகிறது - அது நிகழ்த்திய பேரழிவு, மரண விவரங்கள், மற்றும் அது செடார் ரிட்ஜ் நகரில் வாழும் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் போன்றவை விரிவாய் ஒளிபரப்பாகிறது.[1]*

இதேபோன்ற காட்சியொன்றை, வெளிப்படுத்தின விசேஷத்தில் மகா பாபிலோனின் அழிவு பற்றிய விஷயத்தில் நாம் காணுகின்றோம்: 14ம் அதிகாரத்தில், ஆகாயத்தில் பறந்து சென்ற தூதன் ஒருவர், "பாபிலோன் மகா நகரம் விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே!" என்று அறிவித்தார் (வசனம் 8). பாபிலோன் அடையாளப்படுத்தப்படவுமில்லை, விவரிக்கப்படவுமில்லை. அதன் வீழ்ச்சியைப் பற்றிய விவரங்கள் எதுவும் தரப்படவில்லை. வெறும் அறிவிப்பை மட்டுமே நாம் கண்டோம்.

16ம் அதிகாரத்தில், கோபக்கலசங்கள் பாபிலோனின் அழிவினால் உச்சக்காட்சியை அடைந்தன: "அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது" (வசனம் 19). இந்தப் பகுதியில் பாபிலோன் ஒரு

நகரம் என்று சித்தரிக்கப்பட்டது. அதன்மீது தேவன் கோபமாயிருந்தார் என்பது தெளிவு, ஆனால் பல கேள்விகள் பதில் அளிக்கப்படாது எஞ்சியிருந்தன: "பாபிலோன் என்பது உண்மையிலேயே ஒரு நகரமா? ஆம் என்றால் அது எந்த நகரம்?''; ''தேவனுடைய கோபத்தைப் பெறும் அளவுக்குப் பாபிலோன் என்ன செய்திருந்தது?''; ''அது மிகச்சரியாக எவ்வாறு அழிக்கப்படவேண்டியதாயிருந்தது?"

கடைசியில், 17முதல் 19வரையிலான அதிகாரங்களில், மகா பாபிலோனின் அழிவு பற்றிய "முழு வரலாறு" நமக்குத் தரப்படுகிறது: 17ம் அதிகாரத்தில், பாபிலோன் என்பது யார் (மற்றும் எது) என்பது பற்றிய விளக்கம் ஒன்றைக் கொண்டுள்ளோம். 18ம் அதிகாரத்தில் அதன் வீழ்ச்சியானது புவியியல் ரீதியாகச் சித்தரிக்கப்படுகிறது. 19ம் அதிகாரத்தில் அதன் வீழ்ச்சியினிமித்தம் உண்மையுள்ளவர்கள் மத்தியில் அகமகிழ்வைக் காண்போம். (பாபிலோனின் வீழ்ச்சியை எடுத்துக்கூறுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவானது, தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு - மற்றும் நமக்கு - இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது.)

இந்தப் பாடமானது 17ம் அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்களை மையப்படுத்தியிருக்கும். நாம், மகா பாபிலோனை அடையாளப்படுத்த விரும்புகின்றோம்: அது யாராயிருந்தது? மற்றும் அது யாராய் இருக்கிறது? விசேஷமாக நாம், பிசாசின் திட்டத்தில் பாபிலோனுக்குரிய தனிச்சிறந்த இடம் பற்றி வலியுறுத்த விரும்புகின்றோம்: அது சாத்தானின் *மூன்றாவது* கூட்டாளியாக இருக்கிறது. கடலில் இருந்து வந்த மிருகம் (இது "மிருகம்" என்று வழக்கமாக அழைக்கப்பட்டது) முதல் கூட்டாளியாய் இருந்தது; நிலத்தில் இருந்து வந்த மிருகம் (இது ''கள்ளத் தீர்க்கதரிசி'' என்றும் அழைக்கப்பட்டது) இரண்டாவது கூட்டாளியாய் இருந்தது; மகா பாபிலோன் என்பது மூன்றாவது கூட்டாளியாய் இருக்கிறது. மிருகம் (யோவானின் நாட்களில் ரோமப் பேரரசு) என்பது: பிசாசானவன் பயன்படுத்தும் அணுகுமுறைகளில் ஒன்றான *பயமுறுத்துதல்*[2] என்பதால் குறிக்கப்படுகிறது. கள்ளத் தீர்க்கதரிசி (யோவானின் நாட்களில், பேரரச வணக்கத்தை அமுல்படுத்திய/நிர்ப்பந்தித்த முகமைகள்) என்பவை, பிசாசானவன் பயன்படுத்தும் இரண்டாவது அணுகுமுறையான *வஞ்சனை*[3] என்பதால் குறிக்கப்படுகிறது. மகா பாபிலோன் என்பது: *மோசம்போக்குதல்* என்ற மூன்றாவது அணுகுமுறையைக் குறிக்கிறது.

உங்கள் இருதயம் (உங்கள் உள்ளான பகுதி) என்பது, புத்திகூர்மை, உணர்வு, மற்றும் மனவிருப்பம் ஆகியவற்றினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிசாசானவன், உங்கள் மனவிருப்பத்தைப் பயமுறுத்துதல் மூலம் வளைய வைக்க முயற்சி செய்கின்றான். அது வெற்றிபெறவில்லை என்றால், அவன் உங்கள் புத்திக்கூர்மையை வஞ்சகத்தினால் சூழ்ந்துகொள்ள முயற்சி செய்கின்றான். இருப்பினும், நீங்கள் அவனது அழுத்தத்திற்கு இணங்காத அளவு மிகவும் கடினத்தன்மையுடனும், அவனது பொய்களை நம்பாத அளவுக்கு மிகுந்த கூருணர்வும் கொண்டிருந்தால், அவன் முயற்சி செய்வதை விட்டு விடுவதில்லை: அவன் இன்னமும் மகா பாபிலோனைக்

கொண்டுள்ளான், அது உங்கள் உணர்வின் இருளான பக்கத்தை ஈர்ப்பதாயிருக்கும். அது உங்களை மோசம்போக்க முயற்சிக்கும் - அது தோல்வியடைகின்றதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி வெற்றியடைகின்றது.

பாபிலோன் என்பது வலிமைமிகுந்த எதிரியாக உள்ளது. இந்தப் பாடத்திற்கு நான், ''பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது'' என்று தலைப்பிட்டுள்ளேன். ஏனென்றால் இந்த தலைப்பானது செயல்தாக்கம் தருவதை நோக்கங்கொண்டுள்ளது, "பாபிலோன்" என்பதற்குப் பதிலாக கவர்ச்சிகரமான பெண் ஒருத்தியின் பெயரை இடுங்கள்.[4] உங்கள் நேசத்திற்குரிய மனைவியைத் தவிர வேறு யாராவது ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுங்கள். நமது நோக்கத்திற்காக, உலகத்தில் மயக்கும் பெண் ஒருத்தியைப் பற்றி நினைத்துப்பாருங்கள். அந்த பெண் உங்களை மயக்க முயற்சி செய்தால் விஷயம் என்னவாக இருக்கும்? மனிதர்கள் மற்றும் தேவன் ஆகியோரின் சட்டத்தை மீறும்படி உங்களை அவள் வஞ்சித்தால் என்னவாகும்? நீங்கள் எவ்வாறு பதில்செயல் செய்வீர்கள்?

இந்தப் பாடமானது, நமது வேதவசனப்பகுதியில் இருந்து தரவழைக்கப்பட்ட மூன்று சத்தியங்களின் மீது கவனம் குவிக்கும். நீங்களும் நானும் பாபிலோனின் சாவுக்கேதுவான கவர்ச்சிகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்றால், இந்த சத்தியங்களை அறிந்திருக்க வேண்டும்.

## அவளது விரும்பத்தக்க தன்மையை மறுக்க இயலாது (17:1-6, 9, 15, 18)

இவ்வசனப்பகுதியானது, "ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி, நீ வா ... என்றான்" (வசனம் 1அ) என்று தொடங்குகிறது. ஏழு தூதரில் பேசியது யார் என்று நமக்குக் கூறப்படவில்லை.[5]

**சோதனைக்காரி**

யோவானிடத்தில் தூதன், ''திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசிக்கு ... வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன்" என்று கூறினார் (வசனங்கள் 1, 2).[6] 5ம் வசனத்தில் இந்த "மகா வேசி" என்பது "மகா பாபிலோன்" என்று அடையாளப்படுத்தப் படுகிறது. பின்பு தூதன் ''திரளான தண்ணீர்கள்'' பற்றி விளக்கம் தருகின்றார்: "அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும் பாஷைக்காரருமாம்" (வசனம் 15).[7] "ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள் பாஷைக்காரர்" என்ற நான்கு மடங்கு வகைப்பிரிவு ஒவ்வொருவரையும் உள்ளடக்குகிறது.[8] ''உட்கார்ந்திருக்கிற'' என்ற சொற்றொடரானது, உலகத்தின் ஒய்வற்ற ஜனக்கூட்டத்தின்மீது மகா வேசியானவள் ஆளுகை செய்கின்றாள் என்பதைக் குறிக்கிறது.

*''வேசி'' என்ற சொற்றொடரானது, மோசம்போக்குதலே அவள் தொழிலாக உள்ளது என்பதை உடனடியாக நமக்குக் கூறுகிறது. (வேசியின் சூழ்ச்சிகள் மோசம்போக்குவதாயிருக்கக் கூடும் என்பதில் சந்தேகம் ஏதாவது இருந்தால், நீதிமொழிகள் 5, 7 மற்றும் 9ம் அதிகாரங்களை வாசிக்கவும்.) அவள் தனது தொழிலில் மகிழ்வுடன் அனுபவித்த வெற்றியானது 1ம் வசனத்தின் பிற்பகுதியில் வலியுறுத்தப்படுகிறது: "(மகா வேசியோடே) பூமியின் இராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே'' (வசனம் 1ஆ).[9] "பூமியின் இராஜாக்கள்" பூமியை ஆண்ட செல்வாக்கு மிகுந்த ஆட்சியாளர்களாய் இருந்தனர்.[10] இந்த மனிதர்கள் நடத்திய இடத்தில் அவர்களின் குடிகள் பின்தொடர்ந்தனர்: "அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே"[11] (வசனம் 1இ). மதுபானம் என்பது சோதனையை எதிர்த்து நிற்கும் தன்மையைக் குறைக்கக்கூடும், மற்றும் அந்த மகா வேசி, தனது தொழிலின் எல்லாத் தந்திரங்களையும் அறிந்திருந்தாள்.*

*தூதன் அப்போஸ்தலரை ''ஆவிக்குள் வனாந்திரத்திற்கு'' கொண்டுபோனார் (வசனம் 3அ).[12] யோவான் தொடர்ந்து ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கலானார்.[13] 12ம் அதிகாரத்தில் நாம் கண்ட பெண் தேவனால் பாதுகாக்கப்படுவதற்கென்று வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டிருந்தாள் (12:14). ஒருவேளை யோவானும், மகா வேசியிடத்தில் இருந்து பாதுகாப்பாய் இருப்பதற்காக அங்கு கொண்டு போகப்பட்டிருக்கலாம். ஒருவேளை அந்த இடமானது, அவளை அவர் தெளிவாகக் காணுவதற்குச் சாதகமான இடமாயிருக்கலாம்.[14]*

*அங்கு சென்ற உடனே அவர், திகைக்க வைக்கும் காட்சியொன்றைக் கண்டார்: "ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும், தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்[15] மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருந்தாள்'' (வசனம் 3ஆ). இந்த ஸ்திரீ ஏறியிருந்த சிவப்பு நிறமுள்ள மிருகம் என்பது 13ம் அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டிருந்ததாகும்:[16] "... அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும், அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன'' (13:1).[17] 17ம் அதிகாரம், இந்த அசுரமிருகம் பற்றிய துணை விபரங்களைக் கூடத்தருகிறது: அது தனது எஜமானாகிய வலுசர்ப்பத்தை (சாத்தானை)ப் போன்றே சிவப்பு நிறம் கொண்டிருந்தது (12:3).[18] முன்னதாக, அதன் தலைகளில் மாத்திரமே தூஷணமான நாமங்கள் இருந்தன; இப்போது அது தூஷணங்களால் நிறைந்திருந்தது.[19] மீண்டுமாக, ''உட்கார்ந்திருத்தல்'' என்பது ஆளுகையையும் கட்டுப்பாடு செலுத்துதலையும் குறிக்கிறது: அனுபவ சாலியான ஒரு குதிரைவீரன் தனது குதிரையின்மீது கட்டுப்பாடு கொண்டிருப்பதுபோல், அந்தப் பெண்ணானவள் மிருகத்தின்மீது கட்டுப்பாடு செலுத்தினாள்.[20]*

*இந்தப் பெண்ணைப் பற்றி 4 மற்றும் 5அ வசனங்களில் விவரிக்கப் படுகிறது: "அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து,*

பொன்னினாலும் இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, ... பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம்,[21] ‘**மகா பாபிலோன்**, ...’ ” என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. (“மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்” என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இரத்தாம்பரம் மற்றும் சிவப்பு நிறம் என்பவை, இராஜரீக வம்சத்தாலும் தேர்ந்துகொள்ளப்பட்ட சிறுகுழுவைச் சேர்ந்தவர்களாலும் உடுத்தப்படும் நிறங்களாய் இருந்தன.[22] பொன், இரத்தினங்கள் மற்றும் முத்துக்கள் என்பவற்றைச் செல்வந்தர்கள் மாத்திரமே வாங்க முடியும். பாபிலோன் ‘‘ஒரு இராஜ ஸ்திரீயைப் போல்’’ (18:7) உடுத்துவிக்கப்பட்டிருந்தது. இது போலிப் பகட்டான தெரு உலாவருபவள் போல் இருக்கவில்லை; இது உயர் சமுகத்துடன் கலந்திருந்தது. இன்றைய நாட்களில் இது, வசதிமிக்க, சலிப்புற்றுள்ள, நலிவுற்ற ‘‘முன்னணி அமைப்பாக” இருக்கும். இது தொலைக்காட்சி நிகழ்ச்சியில், “செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்களின் வாழ்வு நடை” என்று சித்தரிக்கப்படும்.

**பட்டணம்**

நாம் இன்னும் கடந்து போவதற்கு முன்பு, ‘‘மகா வேசியை’’ அடையாளம் காண்பது அவசியமாக உள்ளது. நமது வசனப்பகுதியில் இவள் ‘‘பாபிலோன்’’[23] என்று மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டு இருக்கின்றாள். பழங்கால மெசப்பொத்தாமிய நகரமான பாபிலோன் என்பது பழைய நாட்களில் மிகவும் நன்கு அறியப்பட்ட நகரங்களில் ஒன்றாக இருந்தது. அங்கு, ‘‘நகர ஆடம்பர வசதியும், கற்றறிதலும், வர்த்தகமும் மனிதர்களின் கவனத்தை முதன்முதலாக கவரத்தொடங்கின.’’[24] அது “ஒரு உலகப் பேரரசின் அரசியல்ரீதியான மற்றும் மதரீதியான தலைநகரமாயிருந்தது, அது தனது ஒழுக்கக்கேடான காரியங்களுக்குப் புகழ் பெற்றிருந்தது.’’[25] யூதத்துவச் சிந்தனையில், பாபிலோன் என்பது தேவபக்தியின்மைக்குச் சாயலாகவும் தேவனுடைய மக்களிடத்தில் வெறுப்புணர்வுக்குச் சாயலாகவும் இருந்தது. பாபிலோனியர்கள் கி.மு. 586ல் எருசலேமை அழித்து, இஸ்ரவேல் மக்களை அடிமைப்படுத்தி, அவர்களை ஒரு அயல் நாட்டிற்குக் கொண்டு சென்றிருந்தனர். “மகா பாபிலோன்” என்ற சொற்றொடரானது தானியேல் 4:30ல் இருந்து வருகிறது மற்றும் இது அந்த நகரின் உண்மையான மதிப்பையல்ல, ஆனால் கற்பனை செய்யப்பட்ட முக்கியத்தையே குறிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் தமது சிந்தையில், பாபிலோனின் ஆவியை உடையதாயிருந்த ஒரு நகரத்தைத்தான் கொண்டிருந்தார் என்பதில் கேள்வி எதுவும் இல்லாதது போல் காணப்படுகிறது (வசனம் 18; 16:19). “எந்த நகரம்?” என்பதே கேள்வியாக உள்ளது, நாம் அதற்குப் பதில் அளிக்க, “பூமியின் இராஜாக்கள் மேல் இராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரம்” (வசனம் 18) என்ற வார்த்தைகளை யோவானின் வாசகர்கள் வாசித்தபோது, அவர்களின் சிந்தைகளுக்கு வந்திருக்கக்கூடிய நகரம் எதுவாக

இருந்திருக்கும்? என்று கேட்பது அவசியமாக உள்ளது. ரோமாபுரி நகரம் ஒன்றுதான் இதற்குத் தகுதியானதாக இருந்தது. (''இராஜ்யபாரம் பண்ணுகிற'' என்ற நிகழ்கால வினைச்சொல்லாக உள்ள வார்த்தையைக் கவனியுங்கள்; அந்த ''மகா நகரம்''தான் வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட வேளையில் ஆளுகை செய்து கொண்டிருந்தது.) ஜேம்ஸ் எஃபர்டு, "ஸ்திரீ என்பவள் ரோமாபுரியே என்பது தெளிவாக உள்ளது ... யோவான் ஒரு சித்திரத்தை வரைந்து அதில் பெரிய எழுத்துக்களைக் கொண்டு பெயர்ப்பட்டியல் இட்டிருந்தால்கூட இவ்வளவு வெளிப்படையாய் இதைக் கூறியிருக்க முடியாது" என்று எழுதினார்.[26]

இவ்விஷயத்தில் தொடக்ககால வாசகர்களுக்குக் கேள்வி ஏதேனும் இருந்திருக்கும் என்றால், அது 9ம் வசனத்தில் அவ்வளவு மறைவாக இராத "குறிப்பினால்" நிச்சயமாகவே நீக்கப்பட்டிருக்கும்: "அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.'' ஹென்றி ஸ்வீட் என்பவர், ''இந்த வார்த்தைகளின் அர்த்தம் பற்றி நியாயமான எந்த சந்தேகமும் ஆதரிக்கப்பட முடியாது. ரோமாபுரியின் ஏழு மலைகள் என்பவை, லத்தீன் கவிஞர்கள் மத்தியில் பொதுவான இடம் [உருவகம்] பெற்றிருந்தன'' என்று எழுதினார்.[27] ஹோமர் ஹெய்லீ என்பவர் பின்வருமாறு ஒப்புக்கொண்டார்: ''தைபர் ஆற்றைச் சுற்றிலும் உள்ளவையும் ரோமாபுரி நகரம் கட்டி எழுப்பப்பட அஸ்திபாரமாக இருந்தவைகளுமான ஏழு மலைகள், ரோமக் கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஆய்வுப்பொருளாக மிகநீண்ட காலமாகவே இருந்துவந்தன ... யோவானின் வாசகர்களுடைய சிந்தையில் ரோமாபுரி என்பதே உடனடியாகத் தோன்றியிருக்கும்.''[28]

மகா பாபிலோன் என்பது ரோமாபுரியைக் குறிக்கிறது என்பதை நம்பாத எழுத்தாளர்களும்கூட, இதுதான் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சிந்தையில் முதலில் வந்திருக்கும் என்று ஒப்புக்கொள்கின்றனர். யோவானின் வாசகர்கள் ரோமாபுரியைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் நோக்கங்கொண்டிருந்தால், அனேகமாக அவர், ''நான் ரோமாபுரியை இவ்விடத்தில் *அர்த்தப்படுத்தவில்லை*'' என்ற மறுதலிப்புக் கூற்றைக் கூட்டியிருக்க வேண்டியிருக்கும். புரூஸ் மெட்ஸ்ஸெஜர் என்பவர், "எபிரெயர்களுக்கு பாபிலோன் என்பது, எல்லாத் துன்மார்க்கத்தையும் குறித்ததாகவும், உபத்திரவத்தை அடையாளப் படுத்தியதாகவும் இருந்தது போலவே, யோவானுக்கு ரோமாபுரி என்பது இன்னொரு பாபிலோனாக, மோசம்போக்கும் எல்லா ஆடம்பரமும் குற்றமும் உடையதாக, பொங்கியெழும் உலகாதாய நோக்கமும் சுயநலமும் உடையதாக இருந்தது"[29] என்று குறிப்பிட்டார்.

### சோதனை

இருப்பினும், நம்மில் பெரும்பான்மையானவர்கள், பிராங்க் பேக் என்பவர் கூறும், "மகா பாபிலோன் என்பது பழங்கால ரோமாபுரியை அதன் துன்மார்க்க விக்கிரக ஆராதனையுடனும் மோசம்போக்கும் பேரரச வணக்கத்துடனும் அடையாளப்படுத்துவதைக் காட்டிலும் அதிகமான

விஷயங்களைக் கொண்டுள்ளது. அது காலங்கள் தோறும் பல்வேறு வடிவங்களின்கீழ், தேவனைப் புறக்கணிக்கும் உலகத்தில் செல்வாக்குகளையும் அதிகாரங்களையும் அடையாளப்படுத்துகிறது"[30] என்ற கருத்தை ஒப்புக்கொள்வோம்.

நமது தொடக்க இடம் ஒரு நகரமாக இருந்ததால், நான் சென்று கண்டுள்ளது போன்ற ஒரு பெரிய நகரம் என்பதுதான் என் சிந்தைக்கு வருகிற முதல் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது - இது கலை மற்றும் கலாச்சாரத்திற்கு மையமாக இருப்பதோடுகூட, குற்றம் மற்றும் மோசடி ஆகியவற்றிற்கு தலைமை ஊற்றாகவும் இருந்தது. "பெரிய நகரம்" என்று அழைக்கப்படும் சங்கொலியைக் கேட்டு அங்கு தங்கச் சென்று, விரைவில் அதன் வாழ்வுநடையைத் தழுவிக்கொண்ட இளைஞர்கள் (மற்றும் அவ்வளவு இளைஞராயிராத சிலர்) பற்றிய பல உதாரணங்களைத் தரமுடியும்.

இருப்பினும், மகா வேசியால் மோசம்போக்கப்படுவதற்கு நாம், நியூயார்க் நகரம், லாஸ் ஏஞ்சலஸ், இலண்டன் அல்லது பாரீஸ் போன்ற நகரத்திற்குத் செல்ல வேண்டியதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உணர்வெழுச்சி, வசதி மற்றும் ஆதாயம் என்பவை வாழ்வின் அடிப்படை இலக்குகளாக உள்ள எந்த ஒரு இடமும் மற்றும் எல்லா இடங்களும் மகா பாபிலோனாகவே உள்ளன. நீங்கள் அமெரிக்காவின் ஒரு சிறிய நகரத்திலோ, அல்லது ஆஸ்திரேலியாவின் வாகா வாகாவிலோ, அல்லது வேறு எவ்விடத்திலோ வாழ்ந்தாலும், இன்னமும் அந்த வேசியானவள், "இடுக்கமும் நெருக்கமுமான" (மத்தேயு 7:14ஐக் காணவும்) வழியில் இருந்து உங்களை மயக்கி விலக்க முயற்சிசெய்யும் வகையில், உங்கள் காதுகளில் இரகசியம் பேசுகின்றாள். கிளாரென்ஸ் மெக்கார்ட்னீ என்பவர், பாபிலோனின் கவர்ச்சிகள் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> ஓ உலகமே, ஓ உலகமே, நீ எப்படிப்பட்ட ஒரு வஞ்சகனாக இருக்கின்றாய்! ... நீ உனது இச்சகப் பேச்சினால் எங்களை மோசம்போக்கி, ஒப்பனையூட்டப்பட்ட முகத்தைக் கொண்டு எங்களைக் கவருகின்றாய். உன்மீது நாங்கள் கொண்டுள்ள பார்வையற்ற மோகம் மற்றும் பற்றியெரியும் அன்பு ஆகியவற்றிற்காக, இமைப்பொழுது அல்லது அதற்குத் சற்றே அதிகமான வேளை மாத்திரம் நிலவுகிற, உண்மையற்ற மோசம்போக்கும் உனது சந்தோஷங்களுக்காக, நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை மகிழ்ச்சியோடு விற்று, எங்கள் தேவனை மறந்துபோய், எங்கள் கர்த்தரை மீண்டும் புதிதாகச் சிலுவையில் அறைகின்றோம், மற்றும் நித்திய சந்தோஷத்திற்கான எங்கள் நம்பிக்கைகளைத் துறக்கின்றோம்.[31]

பாபிலோன் என்பது உங்கள் பலவீனங்களை அறிந்துள்ளது (யாக்கோபு 1:14), மற்றும் அவற்றை முறையற்ற வழியில் பயன்படுத்த முயற்சி செய்யும் என்பதை ஒருபோதும் சந்தேகப்படாதீர்கள்.

மோசம்போக்கப்பட்டிருத்தலைத் தவிர்ப்பதற்கு, முதலில் நாம்,

*சோதனையானது சோதிக்கக்கூடியது என்பதை, அதாவது, பாவம் என்பது சந்தோஷப்படுத்தக்கூடியதாக இருக்க முடியும், அதாவது, தடை செய்யப்பட்டது கவர்ச்சிகரமானதாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலர், பொங்கியெழும் பாபிலோனைக் கண்டபோது, ''மிகவும் ஆச்சரியப்பட்டார்'' (வெளிப்படுத்தின விசேஷம் 17:6;* NLT*)*[32] *என்றால், நீங்களும் நானும்கூட மருட்சியடைவோம் என்பதை எதிர்பார்க்க வேண்டும். அவள், "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும், அந்தரங்கத்தில் புசிக்கும் அப்பம் இன்பமாயிருக்கும்" (நீதிமொழிகள் 9:17) என்று முணுமுணுக்கும்போது, நாம் தயங்கத் துணியாது இருக்கக்கடவோம். நாம் - நீண்ட காலத்திற்கு முன்பு யோசேப்பு செய்ததைப்போல் (ஆதியாகமம் 39:12) - ''தப்பி ஓட'' வேண்டும் (2 தீமோத்தேயு 2:22).*

## *அவளது இழிந்த நிலைபற்றிச் சந்தேகம் கொள்ளக்கூடாது (17:1, 4-6)*

*மோசம்போக்கப்படுதலைத் தவிர்ப்பதற்கு, மேற்பரப்புக்குக் கீழாக, பளபளப்புக்குக் கீழாக உள்ள உண்மை நிலையைக் கண்ணோக்கும் திறமையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

### *கீழ்த்தரமான நிலை*

*பாபிலோனின் நேர்த்தியான தன்மைக்குக் கீழாக, அது "மகா வேசி" (வசனம் 1* KJV*) என்பதைத் தவிர வேறு எதுவுமாக இருக்கவில்லை. மிகாயீல் வில்காக் என்பவர் இவளைப் பற்றிய பின்வரும் உருவகத்தை முன்வைத்தார்:*

> *... [பாபிலோன்] கொண்டிருந்த யாவையும் அவளது வேசித்தனம், வேசித்தனம், வேசித்தனம் என்றே எழுதப்பட்டுள்ளது. நாம் இந்த வார்த்தையின் கிரேக்க வேர்வார்த்தையான* porn *என்பதற்கு நன்கு பழக்கப்பட்டவர்களாய் இருக்கின்றோம்; மற்றும் இதை யோவான் ஐந்து முறை திரும்பத் திரும்பக் கூறுகின்றார்,*[33] *இதை இவர் ரசித்தார் என்பதால் அல்ல, ஆனால் அசுத்தமான சுவையைத் துப்புவதற்கு வீணாக முயற்சித்தல் என்ற வகையிலேயே செய்தார்.*[34]

*தலைக்கட்டுகள் என்பவை பழங்கால ரோமாபுரியில் நாகரீகப் பொருட்களாய் இருந்தன, ரோமாபுரியில் இருந்த விபசாரிகள், தங்களின் தலைக்கட்டுகளை சிலவேளைகளில் விளம்பரத்திற்குப் பயன்படுத்தினர். வேசியின் நெற்றியின்மீது அவளது நாமம் எழுதப்பட்டிருந்தது:*[35] ***"மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும்***[36] ***தாய்"*** *(வசனம் 5). (அவள் ஒரு வேசியாக மாத்திரம் இருக்கவில்லை; அவள் தனது மகள்கள் வேசிகளாகும்படி போதிக்கவும் செய்தாள்.)*

*இந்த வேசியைச் சாதகமான வெளிச்சத்தில் முன்வைப்பதற்கு சமீபத்திய ஆண்டுகளில் கணிசமான முயற்சிகள் - நாடகங்களில், புத்தகங்களில், திரைப்படங்களில், மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில்*

- மேற்கொள்ளப்பட்டுள்ளன.[37] இருந்தபோதிலும், வேதாகமத்தின் நிலைப் பாடானது எப்போதும் ஒன்றுபோலவே நிலைத்துள்ளது: விபசாரம் என்பது பாவமாக உள்ளது - இதில் இருந்து மனந்திரும்பி இதிலிருந்து திரும்பாத பட்சத்தில் இது ஆத்துமாவை அழிக்கக்கூடிய பாவமாக உள்ளது.[38]

பாபிலோனின் வேசித்தனமானது உறுதியாகவே, உடல்ரீதியான விபசாரத்தை உள்ளடக்கியிருந்தது, ஆனுல் அத்துடன் தனது வேசித்தனத்தை சுருக்கிக் கொள்ளவில்லை.[39] மகா வேசியானவள் ‘‘அதிகாரம் மற்றும் ஆடம்பரம் ஆகியவற்றின் கேள்விக்கேற்ற முடிவுகளினால், சரியான மற்றும் மாண்புமிக்க எல்லாம் செய்த விபசாரத்தின்’’[40] குற்றம் சுமந்திருந்தாள்.[41] பழைய ஏற்பாட்டில், “வேசி” என்ற சொற்றொடர், உலகத்திற்குத் தங்களையே விற்றுப்போட்ட எவரையும் மற்றும் எல்லாரையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது: நினிவே என்பது வெற்றியின் வேசியாக இருந்தது (நாகூம் 3:4).[42] தீரு என்பது வர்த்தகத்தின் வேசியாக இருந்தது (ஏசாயா 23:8, 17). பாபிலோன் என்பது இன்பத்தின் நாயகியாக இருந்தது (ஏசாயா 47:5). எருசலேம் என்பது மதரீதியான விபசாரக் குற்றத்தை சுமந்திருந்தது (ஏசாயா 1:21; எரேமியா 2:20; எசேக்கியேல் 16:15; 23-29; ஓசியா 9:1). நாம் இந்த உலகத்தின் கடவுள்களுக்காகத் தேவனைக் கைவிட்டு விடுகின்றபோது, நாம் அவருடைய பிரமாணத்தை முறித்துப்போடுவதுடன், அவரது இருதயத்தையும் முறித்துப் போடுகின்றோம்.

17ம் அதிகாரத்தின் வேசியானவள் 19, 21ம் அதிகாரங்களின் மணவாட்டியுடன் நேரெதிராக ஒப்பிடப்பட்டிருக்கின்றாள்:[43] வேசியானவள் செல்வப் பெருக்குடன் உடுத்துவிக்கப்பட்டிருக்கின்றாள்; மணவாட்டியானவள் நீதியினால் உடுத்துவிக்கப்பட்டிருக்கின்றாள். வேசியானவள் காமத்தினால் தூண்டப்பட்டிருக்கின்றாள். மணவாட்டியானவள் அன்பினாள் தூண்டப்பட்டிருக்கின்றாள். வேசியானவள், பாலுறவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொடுக்கின்றாள்; மணவாட்டியானவள் ஒப்புக்கொடுத்தலினால் அன்பைப் பொழிகின்றாள். வேசியானவள் சுயத்தை மையங்கொண்டிருக்கின்றாள்; மணவாட்டியானவள் தனது கணவரை (இயேசுவை)ப் பற்றி அக்கறை கொண்டிருக்கின்றாள்.[44] இவ்விருவரும் குணத்திலும், நிலைப்பாட்டிலும், அடைவிடத்திலும் மாறுபடுகின்றனர்.

இரண்டு வசனங்கள், பாபிலோனில் இருந்து கவர்ச்சிகரமான முகவெட்டைக் கிழித்தெறிந்து, அதன் உண்மை நிலையை வெளிப்படுத்துகின்றன: 4ம் வசனத்தில் இவள் ஒரு பொற்பாத்திரத்தைப் பிடித்துள்ளவளாக, அது புதுக்கிளர்ச்சியூட்டும் பானத்தினால் பொங்கி வழிந்துள்ளது போன்ற நிலையில் அவள் தருவதாகச் சித்தரிக்கப் படுகின்றாள். நெருங்கிப் பரிசோதிக்கையில், அந்தப் பாத்திரம், ‘‘வேசித்தனமாகிய அருவருப்புகளாலும், அசுத்தத்தாலும் நிறைந்திருந்ததாக’’ காணப்படுகிறது. அந்த வேசி, கேளிக்கையை அளிக்கிறாள், ஆனுல் அவள் கொடுப்பது அசுத்தமானதாக இருக்கிறது.

அவளது உண்மையான குணத்தைப் பற்றி மிகவும் வெளிப்படுத்துகிற

கூற்று 6ம் வசனத்தில் காணப்படுகிறது: "அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்" (வசனம் 6அ). "பரிசுத்தவான்கள்" மற்றும் "இயேசுவினுடைய சாட்சிகள்"[45] ஆகியோர், அவளது மோசம்போக்கும் கொடுஞ்செயல்களை எதிர்த்து நின்றிருந்தனர், இது அவளுக்குக் கோபமூட்டியது. அவள் தனது "வசீகரத்திற்கு" எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருந்தவர்களைக் கொலை செய்வதில் வெறித்தனமான மகிழ்ச்சியடைந்தாள்.

எனது பாட்டி என்னிடத்தில், " 'Pretty is' as 'pretty does' " என்று கூறுவதுண்டு. மகா வேசியானவள் வெளிப்பார்வைக்கு அழகு நிறைந்தவளாகக் காணப்பட்டிருக்கலாம், ஆனால் அவளது நடவடிக்கைகள் அவளது அழகற்ற தன்மையை வெளிப்படுத்தின.

**நகரம்**

ராயர்களின் ரோமாபுரிக்கு "அழகற்ற தன்மை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துதல் என்பது கடினமானதாக இருப்பதில்லை. ரோமாபுரியின் சொந்த வரலாற்றாளர்களின் கூற்றுப்படியேகூட, அது - ஒளித்து வைக்கப்பட்ட நிலையில் இன்றி, வெளிப்படையாகவே நடைமுறையில் ஒழுக்கவீனத்தைக்காண்பித்த[46] - இழிகேடானவர்களின் இருப்பிடமாய் இருந்தது. ரோம வரலாற்றாளரான டேசிட்டஸ் என்பவர், ரோமாபுரியை "உலகமுழுவதிலும் உள்ள பயங்கரமான மற்றும் வெட்கக் கேடான விஷயங்களனைத்தும் ஒன்றுகூடி வசிக்க ஒரு இல்லத்தைக் கண்ட" இடம் என்று விவரித்தார்.[47] செனெகா என்ற தத்துவஞானி, ரோமாபுரியை "ஒரு அசுத்தமான சாக்கடை" என்று அழைத்தார்.[48]

ரோமாபுரியானது, "வேசிகளுக்கெல்லாம் தாய்" என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் அதன் தேவ பக்தியற்ற செல்வாக்கானது உலகம் முழுவதிலும் பரவியிருந்தது. ஸ்வீட் என்பவர், "ரோமாபுரிக்குக் கீழ்பட்டிருந்த சகல இனங்களிலும் இருந்த எல்லா *pornai* [வேசி]களும் ரோமாபுரியின் பிள்ளைகளாய் இருந்தனர்; சகல மாகாணங்களிலும் இருந்த எல்லாக் குற்றங்களும் மூடநம்பிக்கைகளும் அவளது மார்பிலிருந்தே உறிஞ்சப்பட்டன" என்று எழுதினார்.[49]

மேலும், ரோமாபுரியானது பரிசுத்தவான்களைக் கொலைசெய்த செயலுக்குப் பொறுப்பாளியாய் இருந்தது. நீரோவின் அக்கிரம மிகுதியானது அவனது சொந்தக் குடிமக்களையே நலிவுறச் செய்திருந்தது. டொமீஷியனின் ஆணைகள், பேரரச வணக்கத்தை மறுத்தல் என்பதை, மரணதண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாக்கியிருந்தன.

**பாதுகாப்பு**

மீண்டுமாக நாம், இந்த வேசி ரோமாபுரியைக் காட்டிலும் அதிகமானவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாள், இவள் நமது வழியில் வருகிற எந்த சோதனையையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாள் என்று கூறுகின்றோம். இந்த சோதனைகளினால் மோசம்போக்கப்படுவதைத்

தவிர்ப்பதற்கு நாம், இவற்றின் உண்மை நிலையில் இவை எவ்வாறு உள்ளன என்று காணவேண்டும். வேசியானவள் தடை செய்யப்பட்ட சந்தோஷங்களை வாக்களிக்கின்றாள், ஆனால் "அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்" (நீதிமொழிகள் 5:5அ). பகுத்தறியும் கண்ணானது, கவர்ச்சிக்கும் நற்தன்மைக்கும் இடையில், கடந்து செல்லும் விஷயத்திற்கும் என்றென்றைக்கும் உள்ள விஷயத்திற்கும் இடையில் வித்தியாசப்படுத்தக் கற்றுக்கொள்கிறது. சோதனைகள் தெளிவாகக் காணப்படும்போது, அவைகள் ஈர்ப்புள்ளவைகளாய் இராமல், வெறுப்பூட்டுபவைகளாய் இருக்கின்றன.

## அவளது அழிவு தாமதப்படாது (17:1)

மூன்றாவது, மகா வேசியினால் மோசம்போக்கப்படுவதில் இருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்கு நாம், அவளது அழிவு நிச்சயமானதாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது.

**அழிவு** (Ruin)

தரிசனத்தில், அவளது நிலைப்பாடானது பொறாமை கொள்ளத் தக்கதாகத் தோன்றுகிறது; அவள் "தான் விரும்பியதைச் சாதித்ததாக" காணப்படுகின்றாள் - ஆனால் நாம், இந்த தரிசனத்தின் நோக்கம் பற்றிய நமது பார்வையை/கண்ணோக்கை இழந்துவிடக் கூடாது. தூதன், "மகா வேசிக்கு வருகிற ஆக்கினையை [நியாயத்தீர்ப்பை]" காண்பித்தார் (17:1). பழைய பழமொழியொன்று, "The bigger they are, the harder they fall" ["பெரியவன் விழுந்தால், வீழ்ச்சியும் பெரியதாய் இருக்கும்"] என்று கூறுகிறது. அந்தப் பழமொழி கோலியாத்துக்கு ஏற்புடையதாயிருந்தது. அது மகா பாபிலோனுக்கும் ஏற்புடையதாக உள்ளது.

**ரோமாபுரி** (Rome)

இந்தத் தரிசனம், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு, "தோற்றங்கள் நிலைப்பதில்லை, ரோமாபுரியின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன" என்று கூறிற்று. J. W. இராபர்ட்ஸ் என்பவர், "சபை அச்சம் கொண்டிருந்த அதிகாரம் நிறைந்த முகவரான ரோமாபுரி நகரம் மற்றும் பேரரசு ஆகியவற்றிற்கு முன்னுரைக்கப்பட்ட அழிவு பற்றி யோவானுக்குக் காண்பிக்கப்பட்டது என்பதைத் தவிர வேறு எந்த முடிவும் சாத்தியமானதாகக் காணப்படுவதில்லை"[50] என்று குறிப்பிட்டார்.

**பரிகாரம்** (Remedy)

இன்றைய நாட்களில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு இந்தத் தரிசனமானது, "பாவத்தின் சந்தோஷங்கள் அநித்தியமானவைகளாய் இருக்கின்றன" (எபிரெயர் 11:25), மற்றும் முடிவில் அவை மரணத்தை மாத்திரமே கொண்டு வருகின்றன (ரோமர் 6:23) என்று அறிவிக்கிறது. இவ்விதமாக, அப்போஸ்தலரான யோவான் தேவனுடைய பிள்ளையாய் உள்ள

*ஒவ்வொருவருக்கும் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தார்,*

> *உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவான் 2:15-17).*

## *முடிவுரை*

*மகா வேசியினால் மோசம்போக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு, "நீங்கள் உலகத்தினால் மயக்கப்பட்டுவிடாதிருக்கும்படி, இயேசுவின்மீது உங்கள் கண்களை வைத்திருங்கள்" என்பது போன்ற பிற பரிந்துரைகளும் தரப்பட முடியும். இருப்பினும் இந்த வேளைக்கு, நமது வேதவசனப் பகுதியினால் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள மூன்று ஆலோசனைக் குறிப்புகளை நாம் வலியுறுத்துகின்றோம்: (1) பாவத்தின் சந்தோஷங்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்; அவைகள் சோதிப்பவைகளாய் இருக்கின்றன. (2) பாவத்தின் உண்மையான இயல்பைப் புறக்கணித்து விடாதீர்கள்; அது சீர்குலையச் செய்வதாக உள்ளது. (3) இந்த உலகத்தின்மீது அன்புகூராதிருங்கள்; இது கடந்து செல்வதாக உள்ளது.*

*மாம்சத்தின் பலவீனம் பற்றிப் பவுல் அறிந்திருந்தார் (ரோமர் 7:14, 15). அவர் தமது சரீரத்தைத் தொடர்ந்து ஒழுங்குக்கு உட்படுத்த - அதைக் கீழ்ப்படியச் செய்ய - வேண்டியதாயிற்று, இல்லையென்றால், பிறருக்குப் பிரசங்கித்த பின்பு, அவர் தாமே இழந்துபோகப்பட்டவராய் இருந்திருப்பார் (1 கொரிந்தியர் 9:27). பவுல் தமது மாம்சத்துடன் இவ்வாறு யுத்தம் செய்வதைக் கொண்டிருந்தார் என்றால், நாம் எவ்வளவு அதிகமாய் அதைக் கொண்டிருப்போம்!*

*மத்திய காலங்களில், ஸ்பெயின் நாட்டில் தண்டனை விதிப்பவர்கள், "கன்னிப்பெண்" என்று அழைக்கப்பட்ட சித்திரவதைக் கருவியொன்றைப் பயன்படுத்தினர். அது அலங்காரமான உடையணிந்த அழகு மிக்க பெண்வடிவம் கொண்டிருந்தது. அதன் முகத்தில் அழைப்பு விடுக்கும் புன்முறுவல் ஒன்றிருந்தது, மற்றும் அதன் கைகள் விரித்து நீட்டப்பட்டிருந்தன, குற்றவாளி, "அந்தக் கன்னிப் பெண்ணை முத்தம் இடும்படி" அந்தப் பொம்மையின் கைகளுக்குள் தள்ளப்படுவான். பின்பு அந்தப் பொம்மையானது அவனை மரணத்தழுவலாகக் கட்டிப்பிடித்துக் கொள்ளும், அப்போது அவன் அதில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கத்திகளால் குத்தப்படுவான்.[51] அதுபோலவே, மகா பாபிலோனும், தனது தடைசெய்யப்பட்டுள்ள சந்தோஷங்களை அனுபவிக்கும்படி மனிதர்களை வரவேற்கையில், அழகு மிகுந்த முகம் ஒன்றைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. இருப்பினும், கடைசியில், அவள்*

*அவர்களை ஆயிரக்கணக்கான வருத்தங்களைக் கொண்டு குத்தி, அவர்களின் ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்புகின்றாள் (ரோமர் 6:23). அவள் அழைக்கும்போது, தப்பியோடுங்கள்! (1 கொரிந்தியர் 6:18; 10:14; 1 தீமோத்தேயு 6:11; 2 தீமோத்தேயு 2:22).*[52]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*பக்கம் 22ல் காணப்படும் "இரண்டு மிருகங்கள் (வலுசர்ப்பத்தின் கூட்டாளிகள்)'' என்ற வரைவட்டவணையைக் காணவும். நீங்கள், பாபிலோனை வலுசர்ப்பத்தின் மூன்றாவது கூட்டாளியாக இந்த வரைவட்டவணையில் சேர்த்துக் கொள்ள விரும்பலாம்: முதல் பத்தியில் நீங்கள் "மகா பாபிலோன், மகா வேசி" என்று எழுதிக்கொள்ளக் கூடும். இரண்டாவது பத்தியில் நீங்கள், "சோதனை மற்றும் மயக்கிக் கவருதல்" ("கிறிஸ்துவுக்கு எதிரான வாழ்வுப்பாணி") என்பதைக் கொண்டிருக்கக் கூடும். மூன்றாவது பத்தியில் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டிருக்கக் கூடும்: "ரோமாபுரி நகரம் தனது உலகளாவிய ஜனரஞ்சகத் தன்மையுடன்." கடைசிப் பத்தியானது ''மோசம்போக்குதல்: மாம்சத்தின் மயக்கம்'' என்பதைக் கொண்டிருக்கக்கூடும்.*

*இந்தப் பாடத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பிற தலைப்புகள் பின்வருமாறு: "மகா பாபிலோன் வீழ்ந்தது!" "நபர்த்துவப்படுத்தப்பட்ட சோதனை"; அல்லது "துன்மார்க்கத்தின் முகபாவனை." வில்லியம் பார்க்ளே என்பவர், ''வேசியாகிப்போன ஒரு நகரம்'' என்ற தலைப்பைக் கொண்டிருந்தார். "மகா வேசியின் ஆட்சியும் அழியும்" என்பது (பீஸ்லீ - முர்ரே என்பவரிடமிருந்து தழுவப்பெற்ற) இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. விளையாட்டுத்தனமான தலைப்புகள் உங்களுக்கு விருப்பமாய் இருந்தால், இங்கு அப்படிப்பட்ட ஒன்று தரப்படுகிறது: "தவறான எல்லா இடங்களிலும் அன்பிற்காகக் கண்ணோக்குதல்."*

---

*குறிப்புகள்*

*[1]தொலைக்காட்சி பற்றிய விவரிப்பு ஏற்புடையதல்லாத ஒரு சமூகத்தில் நீங்கள் வாழ்ந்தால், பேரழிவின் செய்தியுடன் மூன்று மனிதர்கள் ஒரு கிராமத்தினுள் ஒருவர் பின் ஒருவராக ஓடி வருதல் பற்றி நீங்கள் சித்தரிக்கலாம்: முதல் மனிதர், பேரழிவு நடந்தது என்பதை மாத்திரம் அறிகின்றார். இரண்டாவது மனிதர் ஒருசில உண்மைகளைக் கொண்டுள்ளார். கடைசியாக, மூன்றாவது மனிதர் விவரங்களைக் கொடுக்கக்கூடியவராய் இருக்கின்றார். [2]இந்தப் புத்தகத்தில் முன்னதாகக் காணப்படும், "காணுங்கள், கவனியுங்கள், மற்றும் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும். விசேஷமாக, இந்தப் புத்தகத்தின் வேறொரு பக்கத்தில் உள்ள "இரண்டு மிருகங்கள் (வலுசர்ப்பத்தின் கூட்டாளிகள்)" என்ற வரைவட்டவணையை மீண்டும் கண்ணோக்கவும். [3]இந்தப் புத்தகத்தில்*

*காணப்படும் "மாபெரும் வஞ்சனையாளன்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும். மீண்டும் அந்தப் பாடத்தில் உள்ள வரைவட்டவணையைக் காணவும். [4]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு வகுப்பில் அல்லது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் நாட்டில் பெரும்பாலான மனிதர்கள், கவர்ச்சி நிறைந்துள்ளதாகக் காணும் ஏதாவதொரு பெண்ணின் பெயரைப் பயன்படுத்த விரும்பலாம். மகா பாபிலோன் ஒரு பெண்ணாகச் சித்தரிக்கப்படுவதால், ஒரு பெண்ணின் விவரிப்பை நான் பயன்படுத்துகிறேன்; ஆனால் உரையைக் கேட்பவர்களில் உள்ள பெண்களின் பயன்பாட்டிற்காக, நீங்கள் உங்கள் பகுதியில் கவர்ச்சிகரமான ஆண் என்று கருதப்படும் யாரேனும் ஒருவருடைய பெயரைப் பயன்படுத்தவும் விரும்பலாம். [5]ஏழாவது கலசம் பாபிலோன்மீது செயல்தாக்கம் கொண்டதாக இருந்திருக்கலாம் (16:17-19) - ஆனால் இது ஒரு முக்கியமான விவரமாக இருப்பதில்லை. 21:9ல், கிறிஸ்துவின் மணவாட்டி என்ற இன்னொரு பெண்ணை அறிமுகப்படுத்துவதற்கு இதே போன்ற மொழிநடை பயன்படுத்தப்பட்டது என்பதே முக்கியமானதாக உள்ளது. இவ்விரு பெண்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்படி நாம் எதிர்பார்க்கப்படுகின்றோம் என்பது உறுதி. இதைப் பற்றிய அதிகமான விஷயங்களை நாம் பிற்பாடு காண்போம். [6]மகா பாபிலோனுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகத்தின் பெரும்பான்மைப் பாகமானது, பழைய ஏற்பாட்டில் ஐப்பிராத்து நதிக்கரையில் இருந்த பாபிலோனைப் பற்றிய உருவகத்தைப் போன்றதாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, 1ம்வசனத்தை எரேமியா 51:13உடன் ஒப்பிட்டுக் காணவும். [7]ரோமாபுரியானது திரளான தண்ணீர்கள் அருகே அமைந்திராதபடியால், இந்த வேசி எனப்படுவது ரோமாபுரியாக இருக்க முடியாது என்று சில எழுத்தாளர்கள் கூறியுள்ளனர். இருப்பினும், 15ம் வசனமானது, பரிசுத்த ஆவியானவர் நேரடியான அர்த்தத்தில் தண்ணீர்களையல்ல, ஆனுல் மக்களையே குறிப்பிட்டார் என்று நாம் அறியும்படி செய்கிறது. [8]முன்பே நாம் இதேபோன்ற விஷயங்களைக் கவனித்துள்ளோம்: 5:9; 7:9; 10:11; 11:9; 13:7; 14:6. நான்கு சொற்றொடர்களின் பயன்பாடு, மனிதகுலம் முழுமையும் உள்ளடக்கியது என்ற கருத்திற்கு மறுவலியூட்டுகிறது. ("நான்கு" என்பது மனிதத்துவத்தின் எண்ணாக உள்ளது.) "ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்" என்ற சொற்றொடரானது மனிதகுலம் முழுமையையும் பற்றிப் பேசுவதற்காக வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (நான்கு சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன - மற்றும் "நான்கு" என்பது வாழ்வியல் எண்ணாக, படைப்பின் எண்ணாக உள்ளது.) உதாரணமாக 7:9; 11:9; 13:7; 14:6 ஆகிய வசனங்களைக் காணவும். ஒவ்வொரு முறையும் மாறுபட்ட ஒரு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது.) இது இந்தப் புத்தகத்தின் உள்கட்டான வடிவமைப்பிற்கான இன்னொரு உதாரணமாக உள்ளது. [9]மகா பாபிலோன் பற்றிய விவரிப்பை பழைய ஏற்பாட்டில் உள்ள தீரு பற்றிய விவரிப்புடன் (ஏசாயா 23:15-17) ஒப்பிட்டுக் காணவும். [10]சாத்தியமான இடங்களில் எல்லாம் உள்ளூர்த் தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ளுதல் என்பது ரோமாபுரியரசின் கொள்கையாக இருந்தது. இருப்பினும் உள்ளூர் அதிகாரிகள் ரோமாபுரி அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும், அவர்கள் ரோமாபுரியுடன் ஒத்துழைக்கவில்லையென்றால் நீக்கப்படக்கூடியவர்களாகவும் இருந்தனர். ரோமாபுரியின் விருப்பத்திற்கு இணங்க ஆட்சிசெய்த அரசர்களுக்கு ஒரு உதாரணமாக, ஏரோது வம்சத்தைக் கூறமுடியும்.*

*[11]எரேமியா 51:7உடன் ஒப்பிடவும். [12]"ஆவிக்குள்ளாகுதல்" என்பது எதை அர்த்தப்படுத்துவதாக இருப்பினும் (அடுத்த குறிப்பைக் காணவும்), இவ்வசனப்பகுதியானது, தூதன் யோவானை உடலுடன் தூக்கிச் சென்றார் என்று*

அனேகமாக அர்த்தப்படுத்துவதில்லை. வசனப்பகுதியில் பின்தொடரும் காட்சிக்கு அவர் சிந்தையில் "கொண்டுபோகப்பட்டார்." [13]மூல வசனத்தில் "ஆவிக்குள்" என்று மாத்திரம் உள்ளது: திட்டவட்டச் சுட்டுச்சொல் ("the") பயன்படுத்தப்படவில்லை, மற்றும், ''ஆவி'' என்ற வார்த்தையானது பெரிய எழுத்துடன் தொடங்கப்படவேண்டுமா அல்லது என்பது பற்றி எந்தக் குறிப்பும் காணப்படுவதும் இல்லை. "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்'' என்ற பாடத்தில் 1:10ன் மீதான குறிப்புகளைக் காணவும். இதே வார்த்தை 4:2 மற்றும் 21:10ல் காணப்படுகிறது. [14]வேசி அந்த இடத்தில் இருந்தபடியால், யோவான் அங்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். இது சாத்தியமானதாகவே உள்ளது, ஆனால் இது "வனாந்தரம்" என்பதற்கு இந்தப் புத்தகத்தில் முன்னதாகக் காணப்படுவதில் இருந்து மாறுபட்ட ஒரு அர்த்தத்தை அவசியப்படுத்தும். [15]1ம் வசனத்தில் பெண்ணானவள் ''தண்ணீர்கள் மீது அமர்ந்திருக்கின்றாள்'' என்று கூறப்படுவது பற்றியும், 3ம் வசனத்தில் அவள் "ஒரு சிவப்பு நிறமான மிருகத்தின்மீது அமர்ந்திருக்கின்றாள்" என்று கூறப்படுவது பற்றியும் கவலை கொள்ளவேண்டாம். மனிதகுலத்துடனான அவளது உறவின்படி அவள் திரளான தண்ணீர்கள்மீது அமர்ந்தாள், பேரரசுடனான அவளது உறவின்படி அவள் மிருகத்தின்மீது அமர்ந்தாள். தரிசனம் ஒன்றில், உருவகம் என்பது நெகிழ்ச்சியுடன் உள்ளது; இது அறிவிப்பு எதுவுமின்றி மாறக்கூடும் (9ம் வசனத்தில் இந்தப் பெண் மிருகத்தின் தலைகளின்மீது அமர்ந்திருப்பதாக மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது, இது அமர்வதற்கு இயல்பற்ற இடமாக உள்ளது - ஆனால் நாம் இதை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளக் கூடாது). [16]இது வலுசர்ப்பம் என்று சிலர் நினைக்கின்றனர் (வலுசர்ப்பத்திற்கு, ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன); ஆனால் நாம் காணப்போகின்றபடி, வசனப்பகுதியை மேலும் கடந்து செல்லுகையில், மிருகம் (பேரரசு) என்பதே இந்த உருவகத்திற்கு நன்றாக பொருந்துகிறது. [17]ஏழு தலைகளும் மற்றும் பத்து கொம்புகளும் பற்றிய பொதுவான அடையாளத்துவ முக்கியத்திற்கு இப்புத்தகத்தின் முதற்பகுதியில் காணப்படும், "காணுங்கள், கவனியுங்கள், கற்றுக்கொள்ளுங்கள்" என்ற பாடத்தில் காணவும். இந்த அமைப்புகள் 17ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் விசேஷித்த முக்கியத்துவத்தை மேற்கொள்ளும். இந்தப் புத்தகத்தின் அடுத்த பாடத்தில் காணவும். [18]12:3ல் ''சிவப்பு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது 17:3ல் "சிவப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையாக இருப்பதில்லை; ஆனால், இந்தச் சந்தர்ப்பப்பொருளில், இவைகள் ஒருபொருட் பலசொற்களாக நினைக்கப்பட முடியும். நிறம் பற்றிய அடையாளத்துவ முக்கியத்துவத்திற்கு ''வெளிப்படுத்தின விசேஷம், 3'' என்ற புத்தகத்தில் "உங்கள் விரோதியை அறியுங்கள்" என்ற பாடத்தில் காணவும். [19]நாம் 13ம் அதிகாரத்தைப் படித்தபோது, இந்த ''தூஷணப்பெயர்கள்'' என்பவை, அனேகமாக, பேரரசர்கள் தங்களுக்குத் தாங்களே சூட்டிக்கொண்ட தெய்வீகப் பட்டப்பெயர்களாய் இருந்திருக்கலாம் என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். இப்போது இந்த மிருகம் ''தூஷணப் பெயர்களால்'' நிறைந்திருந்தது என்ற உண்மையானது, தெய்வீகப் பட்டப் பெயர்களைத் தூஷணமாய்ப் பயன்படுத்துதல் என்பது பேரரசு முழுவதிலும் பரவியிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம். [20]சற்றுக்காலத்திற்கு/இந்த வேளையில் பாபிலோன் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தது. இந்த அதிகாரத்தின் பிற்பகுதியில், மிருகமானது அவள்மீது திரும்பும்.

[21]''இரகசியம்'' என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டபடி, வெளிப்படுத்துதல் இன்றி அறியப்பட இயலாதவற்றைக்

குறிக்கிறது. "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் "பெரிய செய்தியைக் கொண்டிருந்த ஒரு சிறிய புத்தகம்" என்ற பாடத்தில் 10:7க்கான குறிப்புகளைக் காணவும். 17:5ல் "இரகசியம்" என்பது, பின்தொடரும் பெயரை விவரிக்கும் ஒரு சொற்றொடராகவோ அல்லது அந்தப் பெயரின் ஒரு பாகமாகவோ இருக்கக்கூடும். KJV வேதாகமம் இதைப் பெயரின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்கிறது; NASB வேதாகமம் இதை அப்பெயரை விவரிக்கும் ஒரு சொற்றொடராக எடுத்துக் கொள்கிறது. எவ்வகையிலும் இது, வேசியின் பெயரை நேரடி அர்த்தமாக அல்ல, ஆனால் அடையாளத்துவமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைக் குறிக்கிறது. [22]இரத்தாம்பரம் பற்றி லூக்கா 16:19ஐக் காணவும். இயேசு பரிகாசம் செய்யப்பட்டபோது அவர்மீது போடப்பட்ட அங்கி "சிவப்புநிறம்" கொண்டதாக இருந்தது என்று சுவிசேஷ விவரங்கள் ஒன்றில் (மத்தேயு 27:28, 29) குறிப்பிடப்பட்டுள்ளது. இரத்தாம்பரம் மற்றும் சிவப்பான அங்கி ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட சாயம் செலவுமிக்கதாக இருந்தபடியால், அவ்வுடைகள் விலை உயர்ந்தவையாக இருந்தன. [23]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "வானத்தின் மத்தியிலே பிரசங்க மேடை" என்ற பாடத்தில் 14:8க்கான குறிப்புகளைக் காணவும். [24]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 92. [25]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 273. [26]James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 103. [27]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 220. இந்த மலைகள் பின்வருமாறு: பாலட்டைன், கேப்பிட்டோலின், குயிரினால், அவென்ட்டைன், எஸ்குலைன், விமினல் மற்றும் கேலியன். பாலட்டைன் மற்றும் கேப்பிட்டோலின் மலைகளுக்கு இடையில்தான் ரோமாபுரியின் சட்டப்பேரவை இருந்தது. இனி வெளிவரவிருக்கும் "வெளிப்படுத்தின விசேஷம், 5" என்ற புத்தகத்தில் ரோமாபுரியின் வரைபடத்தில் காணவும். [28]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 350. உலகத்தில் மற்ற (சில) நகரங்களும் ஏழு குன்றுகள் அல்லது ஏழு மலைகளின்மீது கட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மையாக இருந்தபோதிலும், வெளிப்படுத்தின விசேஷம் 17ல் உள்ள விபரங்கள் யாவற்றிற்கும் ''பொருந்துவதாக'' உடனடியாக சிந்தைக்கு வருவது, ஏழு குன்றுகளின்மீது கட்டப்பட்ட ரோமாபுரி நகரமேயாகும். ஒரு மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள ஒரு சில விளக்கவுரையாளர்கள், தனித்தன்மை வாய்ந்தவர்களாய் இருக்கின்றனர். [29]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 85. மகா பாபிலோன் என்பவள் தனது கணவனுக்கு (தேவனுக்கு) உண்மையற்று சோரம் போனவளாயிராமல், விபசாரியாகவே இருந்தாள், அவள் 17முதல் 19வரையிலான அதிகாரங்களில் மதரீதியான உருவகமாக சித்தரிக்கப்படுவதில்லை, ஆனுல் ஒரு வர்த்தகரீதியான உயிர்ப்பொருளாகச் சித்தரிக்கப்படுகின்றாள். மதரீதியற்று இருத்தல் என்பதே அவளது மதமாய் இருந்தது: அதாவது, புகழையும் செல்வத்தையும் ஆராதித்தல். [30]Frank Pack, *Revelation*, Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 16. கடந்த தலைமுறைகளில், "மகா பாபிலோன்" என்பது ரோமன் கத்தோலிக்க சபையைக் குறிக்கிறது என்பது மிகவும் பிரபலமான விளக்கமாய் இருந்தது. நம்மைத் தேவனுடைய வழியில் இருந்து விலக்குவதற்குச் சாத்தான் பயன்படுத்துகின்ற "மயக்கமூட்டும்" வழிகளில் ஒன்றாக இது உள்ளது என்ற நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதில் எனக்கு மறுப்பு எதுவும்

இல்லை. இருப்பினும், கத்தோலிக்கத்தைக் கள்ளத் தீர்க்கதரிசியினால் குறிப்பிட்டால் இன்னும் ஏற்புடையதாக இருக்கும். இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "மாபெரும் வஞ்சனையாளன்" என்ற பாடத்தில் காணவும். மகா பாபிலோன் என்பவள் தனது கணவனுக்கு (தேவனுக்கு) உண்மையற்று சோரம் போனவளாயிராமல், விபசாரியாக இருக்கின்றாள். அவள், 17முதல் 19வரையிலான அதிகாரங்களில் மதரீதியான உருவகமாக சித்தரிக்கப்படுவதில்லை, ஆனால் ஒரு வர்த்தகரீதியான, அரசியல்ரீதியான உயிர்ப்பொருளாகச் சித்தரிக்கப்படுகின்றாள். மதரீதியற்று இருத்தல் என்பதே அவளது மதமாய் இருந்தது: அதாவது புகழையும் செல்வத்தையும் ஆராதித்தல்.

[31]Clarence E. Macartney, *Macartney's Illustrations* (New York: Abingdon Press, 1965), 413-14. [32]*17:6ல் "ஆச்சரியப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* [இது New Living Translation என்ற வேதாகமத்தில் "amazed" என்றும் NASB வேதாகமத்தில் "wondered" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] *வார்த்தை 13:3ல், மிருகத்தைப் பார்த்து "ஆச்சரியப்பட்டவர்களை" விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகவே உள்ளது.* [33]*Porn- என்பது,* "fornication" *(*NASB வேதாகமத்தில் *இவ்வார்த்தை* immorality *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்பதற்கு மாத்திரமல்ல, ஆனுல்* "harlot" *என்பதற்கும் வேராக உள்ளது. மூலவசனத்தில் porn- என்பது, 1, 2, 4 மற்றும் 5ம் வசனங்களில் ஐந்துமுறைகள் காணப்படுகிறது. சில பதிப்புகள் இவ்வசனங்களில், porn- என்பதை* "adulteries" *என்று மொழிபெயர்த்துள்ளன, ஆனால்* "adultery" *என்பதற்குக் கிரேக்க மொழியில் வேறு வார்த்தை உள்ளது.* [34]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 159. [35]*நெற்றியில் பெயர்கள் (மற்றும் பிற அடையாளங்கள் அல்லது முத்திரைகள்) இடப்படுதலுக்கு நாம் பல உதாரணங்களைக் கொண்டிருக்கின்றோம் (3:12; 7:3; 9:4; 13:17; 14:1; 22:4). வேசியின் பெயர் ஒரு தலைப்பட்டையில் எழுதப்படாமல், அவளது நெற்றியிலேயே நேரடியாக எழுதப்பட்டிருப்பதாக நாம் காணவேண்டும் என்பதற்கு சாத்தியக்கூறு உள்ளது.* [36]*"அருவருப்புகள்" என்பது வேதவசனத்தில், விக்கிரகாராதனையையும் அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளையும் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (உபாகமம் 32:16; 2 இராஜாக்கள் 21:11; எரேமியா 44:22). விக்கிரகாராதனை என்பது பேரரச வணக்கத்துடன் ஒன்றிணைந்த பகுதியாக இருந்தது.* [37]*"விபசாரத்தைத் துப்புரவாக்குதல்" என்ற சொற்றொடர் அர்த்தம் உள்ளதாகக் காணப்படும் பகுதியில் நீங்கள் வாழ்ந்தால், அந்தச் சொற்றொடரை இவ்விடத்தில் நீங்கள் கூறமுடியும்.* [38]*வேதவசனங்களில், வேசி என்பது, வெளிப்படையான கீழ்ப்படியாமைக்கு உதாரணமாக, சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (உதாரணத்திற்கு, நீதிமொழிகள் 5:3-5; 23:27, 28; எரேமியா 5:7, 9; ஓசியா 3:3; 1 கொரிந்தியர் 6:15, 16 ஆகிய வசனங்களைக் காணவும்). விபசாரியின் பாவம் என்பது பாலுறவு ரீதியான பாவங்கள் பொதுவான கண்டனங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது (உதாரணமாக கலாத்தியர் 5:19). விபசார பாவத்தைப் பற்றி இரண்டு காரியங்கள் வலியுறுத்தப்பட வேண்டும்: (1) பாவங்களிலே மிகப் பெரியதாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை, (சிலர் நம்புகிறமாதிரி), ஆனால் இது ஆத்துமாவை அழிக்கக்கூடிய பாவமாக உள்ளது. (2) விபசாரியொருத்தி தனது பாவங்களில் இருந்து மனந்திரும்பி, தேவனிடத்திற்குத் திரும்பி, தனது வாழ்வை மாற்றிக்கொண்டால் அவள் மன்னிக்கப்படக்கூடும் (1 கொரிந்தியர் 6:9-11; எபிரெயர் 11:31; யாக்கோபு 2:25 ஆகியவற்றைக் காணவும்).* [39]*(பேரரச வணக்கம் உட்பட) புறதெய்வக் கோவில்களில் ஆராதனை என்பது பாலுறவு தொடர்பான பாவங்களை எவ்வித மாறுபாடுமின்றி உள்ளடக்கிற்று.*

[40]“விபசாரம்” என்ற வார்த்தையை, ஒருவர் “ஒரு தகுதியற்ற காரணத்திற்காகத் தமது திறமைகள், தாலந்துகள் அல்லது பெயர் ஆகியவற்றை விற்றல்'' என்பதைக் குறிப்பிடுவதற்குப் பொதுவான கருத்தில் பயன்படுத்த முடியும்.

[41]Mounce, 307. [42]This sentence and the next three were adapted from Hailey, 343. [43]12ம் அதிகாரத்தில் சபையைக் குறிப்பதிலிருந்து சற்றே மாறுபட்டுள்ள பெண்ணுடனும் இவ்வேசி நேரெதிராக ஒப்பிடப்படுகின்றாள். [44]மற்ற நேர்மாறுகள் ஏற்படுத்தப்படலாம்: வேசியானவள் கனப்படுத்தப்பட்டாள், மணவாட்டி துன்புறுத்தப்பட்டாள் முதலிய, இவ்விரண்டும் நகரத்தைப் பற்றிப் பேசுகின்றன. ஒன்று “புதிய” பாபிலோனாக இருக்கையில் இன்னொன்று “புதிய எருசலேமாக” உள்ளது (21:2) மணவாட்டி என்பது சபையைக் குறிப்பதாக உள்ளது (குறிப்பாக சபையில் உள்ள உண்மையுள்ளவர்களைக் குறிக்கிறது). [45]“பரிசுத்தவான்கள்” மற்றும் ''சாட்சிகள்'' என்ற இருதரப்பாருமே வேசியால் கொலை செய்யப்பட்டிருந்தபடியால், இவ்விருதரப்பாருக்கும் இடையில் வித்தியாசம் எதுவும் ஏற்படுத்தப்படுவதில்லை. இது ரோமாபுரியால் வேதசாட்சியாக மரணம் அடைந்திருந்த ஒவ்வொரு கிறிஸ்தவரையும் குறிப்பிடுவதற்கான கவிதைத்துவ வகையாக உள்ளது. [46]This sentence was adapted from Daniel Russell, *Preaching the Apocalypse* (New York: Abingdon Press, 1935), 197. [47]Tacitus *Ann* 15.44. Quoted in Mounce, 310. கொர்நேலியுஸ் டேசிட்டஸ் (கி.பி. c. 56 - c.115) ஒரு ரோம அரசவை உறுப்பினராகவும் மாபெரும் ரோம வரலாற்றாளர்களில் ஒருவராகவும் இருந்தார். இவர் டொமீஷியனின் சர்வாதிகார ஆட்சியின்கீழ் வாழ்ந்திருந்தார். மவுன்ஸ் என்பவர், “ரோமாபுரியின் பேரரசியாயிருந்த மெஸ்ஸாலினா என்பவள் தனது இளம்பிராயத்தில், தன்னைப் பற்றிப் பிறர் அறியாவண்ணம், வெளிப்படையான/ பொதுவான விபசாரத்தில் ஈடுபட்டது என்ற கொடிய மற்றும் அவகீர்த்தியான விகார நடக்கை பற்றிய ஜீவனல் என்பவரின் விவரமானது, அந்தப் பழங்கால நகரில் இருந்த ஒழுக்கவீனத்தின் ஆழத்தைச் சுட்டிக்காண்பிப்பதாக உள்ளது” என்றும் குறிப்பிட்டார். (Ibid.) [48]Quoted in William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 145. Lucius Annaeus Seneca (c. 4 B.C. - A.D. 65) என்பவர் கிரேக்க நாட்டின் ஸ்தோயிக் பாரம்பரியத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த தத்துவ எழுத்தாளர்களில் ஒருவராயிருந்தார். [49]Swete, 217. [50]J. W. Roberts, *The Revelation to John* (*The Apocalypse*), The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 136.

[51]This illustration was adapted from David F. Burgess, comp. *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 186. [52]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் தேவனிடத்திற்கு ஓடிச்சென்று சேர்வது எப்படி என்று கூற நீங்கள் விரும்பலாம். இந்தக் கருத்துக்களை நீங்கள் ஒரு பிரசங்கத்தில் பயன்படுத்தினால் உங்கள் உரையைக் கேட்பவர்களைத் தேவன் ஆசீர்வதிக்கக் கூடும்படிக்கு அவர் “தேவனிடத்தில் கிட்டிச் சேரும்படி” (யாக்கோபு 4:8) அவர்களை ஊக்குவிக்க நீங்கள் விரும்பலாம். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறாதவர்கள் அதைச் செய்தாக வேண்டும் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:36-38; கலாத்தியர் 3:26, 27). வெதுவெதுப்பான நிலைக்கு வந்துவிட்ட கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குள்ளும் கர்த்தருடைய சபைக்குள்ளும் மறுபடியும் கட்டி எழுப்பப்பட வேண்டும் (நடபடிகள் 8:22; கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:16).

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வலுசர்ப்பத்தின் மூன்று கூட்டாளிகளைப் பட்டியலிடவும். அவைகள் (சாத்தான் தனது சித்தத்தை நாம் செய்யவைக்க முயற்சி செய்யும் வழிகள் என்ற வகையில்) பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று அணுகுமுறைகள் யாவை?
2. மகா வேசியினால் மோசம்போக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு இந்தப் பாடத்தில் மூன்று பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது என்ன? சோதனையானது “சோதிக்கக் கூடியதாக” இருக்க முடியும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?
3. 1ம் வசனத்தில் உள்ள “திரளான தண்ணீர்கள்” என்பதன் அர்த்தம் என்ன?
4. ஸ்திரீயானவள் சிவப்பு நிறமான மிருகத்தின்மீது அமர்ந்திருந்தாள். இந்தப் பாடத்தின்படி, யோவானின் நாட்களில் இம்மிருகம் எதைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று?
5. வேசியானவள் “மகா பாபிலோன்” என்று அழைக்கப்படுகின்றாள். பாபிலோனின் வரலாறு பற்றி நீங்கள் அறிந்துள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளவும். யூதத்துவச் சிந்தையில் பாபிலோன் எதைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று?
6. 17ம் அதிகாரத்தில் “மகா பாபிலோன்” என்பதால் குறிப்பிடப்படுவது யார் அல்லது எது? சில சாத்தியக்கூறுகளாக உள்ளவை யாவை? இந்தப் பாடத்தின்படி, யோவானின் நாட்களில் இந்த மகா பாபிலோன் எதைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று? நீங்கள் இதை ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா?
7. இந்தப் பாடத்தின்படி, இன்றைய நாட்களில் மகா பாபிலோன் என்பது, நமது வழிகளில் சோதனைகளை நிரப்பும் தேவபக்தியற்ற உலகமாக உள்ளது. சோதனை பற்றியும் அதன் மனதிற்கு இனியதன்மை பற்றியும் கலந்துரையாடவும். சாத்தான் உங்கள் பலவீனங்களை அறிந்தவனாக அவற்றைத் தன் சுயநலத்திற்குப் பயன்படுத்த முயற்சி செய்கின்றான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?
8. மகா வேசியினால் மோசம்போக்கப்பட்டிருத்தலைத் தவிர்ப்பதற்குத் தரப்பட்டுள்ள இரண்டாவது பரிந்துரை என்ன?
9. விபசாரமானது உலகத்தினால் அடிக்கடி, ஒரு சாதகமான/ஆதரவான வெளிச்சத்தில் முன்வைக்கப்படுகிறது, ஆனால் அதைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன? விபசாரியொருத்தி, “மன்னிக்கப்பட முடியாத பாவத்தை” செய்திருக்கின்றாளா? விபசாரியொருத்தி இரட்சிக்கப்பட முடியுமா? ஆம் என்றால் எவ்வாறு?

10. பாலுறவு தொடர்பான விபசாரம் தவிர வேறுவகையில் "விபசாரம்" செய்துள்ள குற்றம் நம்மீது சுமத்தப்பட முடியுமா? இது நடைபெறக்கூடிய சில வழிமுறைகளைப் பெயரிடவும்.
11. மகா வேசியினால் மோசம்போக்கப்பட்டிருத்தலைத் தவிர்ப்பதற்குத் தரப்பட்டுள்ள மூன்றாவது பரிந்துரை என்ன?
12. வெளிப்படுத்தின விசேஷம் 17 மற்றும் 18ம் அதிகாரங்களுக்கு, 1 யோவான் 2:15-17 ஒரு நல்ல தொகுப்புரையாக உள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வசனப்பகுதியைப் பற்றியும் நமது வாழ்வில் இதன் நடைமுறைப் பயன்பாடு பற்றியும் கலந்துரையாடவும்.



மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் *(17:4, 5)*